www.Padasalai.Net www.CBSEtips.in

# பத்தாம் வகுப்பு காலாண்டுத்தேர்வு – 2022 (சேலம்)
## தமிழ் விடைக்குறிப்பு

| I | அனைத்து வினாக்களுக்கும் விடையளி | 15X1=15 |
|---|---|---|
| 1. | அ) வணிகக்கப்பல்களும் ஐம்பெருங்காப்பியங்களும் | 1 |
| 2. | ஆ) மணிவகை | 1 |
| 3. | இ) அன்மொழித்தொகை | 1 |
| 4. | ஆ) இன்னிசை அளபெடை | 1 |
| 5. | அ) இருபெயரொட்டு பண்புத்தொகை | 1 |
| 6. | அ) கூவிளம் தேமா மலர் | 1 |
| 7. | ஈ) 105 | 1 |
| 8. | இ) இலா | 1 |
| 9. | இ) கா.ப.செய்குதம்பிப் பாவலர் | 1 |
| 10. | ஆ) 8 | 1 |
| 11. | அ) அருமை துணை | 1 |
| | பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்க விடையளிக்க | |
| 12. | இ) பரிபாடல் | 1 |
| 13. | இ) வானம் | 1 |
| 14. | இ) அடுக்குத்தொடர் | 1 |
| 15. | ஆ) கீரந்தையார் | 1 |

### குறுவினா – பிரிவு – 1 –

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி. (மதிப்பெண்கள்- 18) **4X2=8**

| வினா எண் 21ஆவது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்கவும் | | |
|---|---|---|
| 16. | விடைக்கேற்ற வினா அமைக்க<br>அ) வித்துவக்கோடு என்னும் ஊர் எங்கு உள்ளது?<br>ஆ) முல்லைப்பாட்டை எழுதியவர் யார்?<br>(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக) | <br>1<br>1 |
| 17. | வசன கவிதை<br>❖ உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம் வசனகவிதை எனப்படுகிறது.<br>❖ ஆங்கிலத்தில் Prose Poetry ( free verse ) என்றழைக்கப்படும் இவ்வடிவம் தமிழில் பாரதியாரால் அறிமுகப்படுத்தப்பட்டது. | <br>1<br>1 |
| 18. | மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கு:<br>❖ இனிய வார்த்தைகளும் அன்பும் நோயாளிக்கு முதலில் நம்பிக்கையை அளிக்கும்.<br>❖ நம்பிக்கையின் காரணமாக மருத்துவர் அளிக்கும் மருந்தும் உட்சென்று விரைவில் நோய்தீரும | <br>1<br>1 |
| 19. | மாஅல்<br>❖ பொருள் – திருமால்<br>❖ இலக்கணக்குறிப்பு – செய்யுளிசை அளபெடை | <br>1<br>1 |
| 20. | சிரித்து பேசினர்:<br>❖ சிரித்து சிரித்து பேசினர்.<br>❖ உவகை காரணமாக அடுக்குத்தொடரானது. | <br>1<br>1 |

மா. சுந்தரராஜன் 9566585860

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

| | | |
|---|---|---|
| 21. | திருக்குறள்<br>பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்<br>பொருளல்ல தில்லை பொருள் | 2 |

பிரிவு – 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி 4X2=8

| | | |
|---|---|---|
| 22. | வேங்கை<br>❖ வேங்கை – தனிமொழியாக வேங்கை என்னும் மரத்தைக் குறிக்கும்.<br>❖ வே + கை – தொடர்மொழியாக **வேகின்ற கை** எனப் பொருள் தரும்.<br>இது தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவதால் பொதுமொழி ஆகும். | 1<br>1 |
| 23. | பகுபத உறுப்பிலக்கணம்<br>பதிந்து - பதி + த்(ந்) + த் + உ<br>பதி - பகுதி , த- சந்தி த் - ந் ஆனது விகாரம்<br>த் - இறந்தகால இடைநிலை உ- வினையெச்ச விகுதி | 1<br>1 |
| 24. | எழுவாயைச் செழுமை செய்க<br>(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)<br>அ) நிழல் தரும் மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.<br>ஆ) சிறந்த கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும். | 1<br>1 |
| 25. | கலைச்சொல்<br>அ) **Classical Literature** - செவ்விலக்கியம்<br>ஆ) **Folk Literature** - நாட்டுப்புற இலக்கியம் | 1<br>1 |
| 26. | (பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)<br>அ) விடு வரை கொண்டு வந்து விடு.<br>ஆ) மடுவில் மாடுகள் நீர் அருந்தின. | 1<br>1 |
| 27. | வினா வகை<br>❖ அறிவினா<br>❖ ஐய வினா | 1<br>1 |
| 28. | வினா வகைகள்<br>வினா ஆறு வகைப்படும்.<br>❖ அறிவினா<br>❖ அறியாவினா<br>❖ ஐயவினா<br>❖ கொளல்வினா<br>❖ கொடைவினா<br>❖ ஏவல்வினா | 1/2<br>1<br>1/2 |

பிரிவு – 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி 2X3=6

மா.சுந்தரராஜன்

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

| | | |
|---|---|---|
| 29. | தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கு<br>தமிழ் :<br>• தமிழ், இயல் இசை நாடகம் என **முத்தமிழாய்** வளர்ந்தது.<br>• முதல் இடை கடை ஆகிய **முச்சங்கங்களால்** வளர்க்கப்பட்டது.<br>• ஐம்பெருங்காப்பியங்களை **அணிகலன்களாகப்** பெற்றது.<br>• சங்கப் பலகையில்அமர்ந்திருந்த **சங்கப்புலவர்களால்** காக்கப்பட்டது.<br>கடல் :<br>• கடல், **முத்தினையும் அமிழ்தினையும்** தருகிறது.<br>• வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய **மூன்று வகையான சங்குகளைத்** தருகிறது.<br>• மிகுதியான **வணிகக் கப்பல்கள்** செல்லும்படி இருக்கிறது.<br>• தன் அலையால் **சங்கினைத் தடுத்து நிறுத்திக்** காக்கிறது.<br>இவ்வாறு தமிழழகனார் தமிழையும் கடலையும் ஒப்பிட்டுக் கூறுகிறார். | 1 1/2<br><br>1 1/2 |
| 30. | **சோலைக்காற்று மின்விசிறிக்காற்று உரையாடல்**<br>சோலைக்காற்று : என்னைப்போல இதமான காற்றை உன்னால் தர முடியுமா?<br>மின்விசிறிக்காற்று : ஏன் தர முடியாது? மெதுவாகவும் வீசுவேன் வேகமாகவும் வீசுவேன்<br>சோலைக்காற்று : ஏன்! நானும் மெதுவாகவும் வீசுவேன், வேகமாகவும் வீசுவேன்<br>மின்விசிறிக்காற்று : என்னால் யாருக்கும் எந்த தீங்கும் ஏற்படாது.<br>சோலைக்காற்று : நான் அப்படி ஒன்றும் மனிதர்களுக்குத் தீங்க செய்ய நினைப்பதில்லை.<br>மின்விசிறிக்காற்று : வீடுகட்டி வசதியாக வாழ்பவர்களுக்கு நான் தான் வீட்டை அணி செய்கிறேன்.<br>சோலைக்காற்று : ஆனாலும் நாம் இருவருமே மனிதர்களுக்க முக்கியம்<br>மின்விசிறிக்காற்று : ஆம், நாம் இணைந்து மனிதர்களுக்கு இதமளிப்போம்.<br>**(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)** | 3 |
| 31. | முல்லை – காடும் காடு சார்ந்த இடமும்.<br>❖ வரகு<br>❖ சாமை<br>❖ மூங்கிலரிசி<br>❖ சிவந்த அவரை விதை<br>❖ அரிசி<br>மருதம் - வயலும் வயல் சார்ந்த இடமும்.<br>❖ செந்நெல்<br>❖ வெண்ணெல்<br>❖ வாழைப்பழம்<br>❖ நுங்கு<br>❖ பலாப்பழம்<br>❖ நெல்சோறு   மா.சுந்தரராஜன் 9566585860 | 1 1/2<br><br>1 1/2 |

பிரிவு – 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி 2X3=6

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 32. | மாளாத காதல் நோயாளன் போல்:<br>❖ நோயாளன் - உவமை<br>❖ போல் - உவம உருபு<br>செய்தி —<br>மருத்துவர், உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என்பதனை உணர்ந்த நோயாளி அவரை நேசிப்பார். அதுபோன்று வித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கும் அன்னையே! நீ உனது விளையாட்டால் தீராத துன்பங்களை எனக்குத் தந்தாலும் உன் அடியவனாகிய நான் உன் அருளையே எப்பொழுதும் எதிர்பார்த்து வாழ்வேன் என்கிறார் குலசேகராழ்வார். | 1<br><br>2 |
| 33. | **கற்பதன் இன்றியமையாமை:**<br>❖ இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்கிறார் ஔவையார்.<br>❖ ஒரு மனிதன் தனக்கு வேண்டிய பிற எல்லாவற்றையும் தன் வாழ்நாளின் எப்பகுதியிலும் பெறலாம். ஆனால் கல்வியை இளமையில் தான் பெற முடியும்.<br>❖ கண்ணுடையர் என்பவர் கற்றோர். கேடில் விழுச்செல்வம் கல்வி என்று கல்வியின் பெருமைகளைப் பாராட்டுகின்றார் திருவள்ளுவர்.<br>❖ நாம் கற்கும் கல்வியானது நமது அறிவை விரிவு செய்யும்.<br>❖ அறியாமையை அகற்றும்.<br>❖ ஞான அறிவைக் கொடுக்கும்.<br>❖ நல்ல வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தரும்.<br>❖ வறுமையை விரட்டும்.<br>**(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)** | 1<br>1/2<br><br>1<br>1/2 |
| 34. | நீதி வெண்பா<br>- கா.ப. செய்குதம்பிப் பாவலர்<br>அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி<br>மருளை அகற்றி மதிக்கும் தெருளை<br>அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்<br>பொருத்துவதும் கல்வியென்றே போற்று. | 3 |
| | **அல்லது** | |
| | **காசிக்காண்டம்**<br>**- அதிவீரராம பாண்டியர்**<br>விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்<br>வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்<br>திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்<br>எழுதல் முன் மகிழ்வன செப்பல்<br>பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்<br>போமெனில் பின் செல்வதாதல்<br>பரிந்துநன் முகமன்வழங்கல் இவ்வொன்பான்<br>ஒழுக்கமும் வழிபடும் பண்பே | 3 |
| | **பிரிவு — 2**<br>**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி** | **2X3=6** |
| 35. | **பயின்று வரும் அணி** : உவமை அணி<br>**அணி விளக்கம்** :<br>உவமானம், உவமேயம் இரண்டனுக்கும் இடையில் | 1<br><br>1 |

www.Padasalai.Net www.CBSEtips.in

| | | |
|---|---|---|
| | உவமஉருபு வெளிப்படையாக வருவது உவமையணி எனப்படும்.<br>**அணிப்பொருத்தம் :**<br>அரசன் தன் அதிகாரத்தைக் கொண்டு வரி விதிப்பது – **உவமேயம்**<br>வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிப்பறி செய்வது – **உவமை**<br>போலும் – **உவம உருபு** | 1 |
| 36. | அலகிட்டு வாய்பாடு<br>குற்/றம் – நேர் நேர் – தேமா<br>இலா/னாய்க் / – நிரை நேர் – புளிமா<br>குடி/செய் /து/ – நிரை நேர் நேர் – புளிமாங்காய்<br>வாழ்/வா/னைச் / – நேர் நேர் நேர் – தேமாங்காய்<br>சுற் /றமாச் / – நேர் நிரை – கூவிளம்<br>சுற் /றும் – நேர் நேர் – தேமா<br>உல/கு – நிரைபு – பிறப்பு<br>**இக்குறட்பா 'பிறப்பு' என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.** | 2<br>1 |
| 37. | வழு<br>❖ வழு ஏழு வகைப்படும்.<br>❖ திணை வழு - செழியன் வந்தது.<br>❖ பால் வழு - கண்ணகி உண்டான்.<br>❖ இட வழு - நீ வந்தேன்.<br>❖ கால வழு - நேற்று வருவான்.<br>❖ வினா வழு - ஒரு விரலைக்காட்டி சிறியதோ? பெரியதோ? என்று கேட்டல்.<br>❖ விடை வழு - 'கண்ணன் எங்கே இருக்கிறார்? என்ற வினாவிற்கு கண்ணாடி பைக்குள் இருக்கிறது என்று விடையளித்தல்.<br>❖ மரபு வழு - தென்னை மரங்கள் உள்ள பகுதியைத் தென்னந்தோட்டம் என்று கூறுதல். | 1<br>2 |
| **IV** | **அனைத்து வினாக்களுக்கும் விடையளி** | **5X2=25** |
| 38. அ) | நிகழ்கலை<br>❖ முன்னுரை<br>❖ கரகாட்டம்<br>❖ மயிலாட்டம்<br>❖ காவடியாட்டம்<br>❖ ஒயிலாட்டம்<br>❖ தேவராட்டம், சேர்வையாட்டம்<br>❖ போய்க்கால் குதிரையாட்டம்<br>❖ துப்பு ஆட்டம்<br>❖ புலி ஆட்டம்<br>❖ தெருக்கூத்து<br>❖ தோற்பாவைக்கூத்து<br>❖ முடிவுரை<br>**ஏதேனும் ஐந்து நிகழ்கலைகள் பற்றி எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக.** | 5 |

மா.சந்திரராஜன் 9566585860

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

| | | | |
|---|---|---|---|
| ஆ) | நயம் பாராட்டுக.<br>❖ முன்னுரை<br>❖ திரண்ட கருத்து<br>❖ மையக்கருத்து<br>❖ மோனை<br>❖ எதுகை<br>❖ இயைபு<br>❖ ஓசை<br>❖ சந்தம்<br>❖ அணி<br>❖ சொல்<br>❖ பொருள்<br>❖ முடிவுரை<br>ஏற்புடைய நயங்கள் ஏதேனும் ஐந்து எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக. | 5 |
| 39. அ) | அ) தோழனை வாழ்த்தி மடல்<br>➢ இடம், நாள் (வலப்புறம்)<br>➢ விளித்தொடர்<br>➢ கடிதச்செய்தி<br>➢ முடிவு, ஒப்பம்<br>➢ உறைமேல் முகவரி | 5 |
| ஆ) | உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம்<br>➢ அனுப்புநர்<br>➢ பெறுநர்<br>➢ விளித்தொடர்<br>➢ பொருள்<br>➢ கடிதச்செய்தி<br>➢ முடிவு, ஒப்பம்<br>➢ இடம்<br>➢ நாள்<br>➢ உறைமேல் முகவரி | 5 |
| 40. அ) | பள்ளியிலும் வீட்டிலும் உனது செயல்கள் | 5 |

| பள்ளியில் நான் | வீட்டில் நான் |
|---|---|
| நேரத்தைச் சரியாகக் கடைபிடிப்பேன் | வீட்டுப் பணிகளைப் பகிர்ந்து செய்வேன |
| உடன்பயிலும் மாணவரின் திறமையைப் பாராட்டுவேன் | வகுப்பில் நடக்கும் பாடங்களை வீட்டில் மறுபடியும் படிப்பேன். |
| ஆசிரியர் பாடம் எடுக்கும்போது கவனிப்பேன் | பொருள்களை முறையாக அதற்குரிய இடத்தில் வைப்பேன். |
| ஒழுக்கம் நிறைந்த மாணவனாக இருப்பேன் | ஆதிகாலையில் எழுந்து பாடங்கைளைப் படிப்பேன். |
| ஆசிரியரைப் மதிப்புடன் பார்ப்பேன். | பெற்றோரை மதிப்புடன் நடத்துவேன். |

(பொருத்தமான ஐந்து கருத்துகளுக்கு முழு மதிப்பெண் வழங்குக)

அல்லது

மா. சுந்தரராஜன் 9566585860

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

| | | |
|---|---|---|
| ஆ) | மொழிபெயர்ப்பு<br>➢ தங்கக் கதிர்களைக் கொண்ட கதிரவன் காலையில் உதிக்கின்றது.<br>➢ தன் பொன்னிறக் கதிர்களால் இருளை விரட்டுகிறது. வேண்ணிற மேகமானது அங்குமிங்கும் நகர்கிறது.<br>➢ வண்ண நிறமான பறவைகள் காலையில் தன் இசைகீதத்தை இசைக்கிறது.<br>➢ சுறுசுறுப்பான வண்ணத்துப் பூச்சிகள் மலர்களைச் சுற்றி நடனமாடுகின்றன.<br>➢ மலர்களின் நறுமணம் காற்றை எங்கும் வீசி இதமான சூழலைத் தருகிறது. | 5 |
| | குறிப்பு : செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா | |
| | 1. விருந்தே புதுமை<br>2. நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்று குழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தனர்.<br>3. வீட்டிற்கு வந்தவருக்கு வறிய நிலையிலும் எவ்வழியிலேனும் முயன்று விருந்தளித்து மகிழ்ந்தனர்.<br>4. விதைத்துவிட்டு வந்த நெல்லை அரிந்து வந்து பின் சமைத்து விருந்து படைத்த திறம் பெரியபுராணத்தில் காட்டப்படுகிறது.<br>5. விருந்தோம்பல் | 5 |
| 41. | நூலக உறுப்பினர் படிவம்<br>உரிய விபரங்களுடன் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்திற்கு முழு மதிப்பெண் வழங்குக. | 5 |
| 42. | காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.<br>(பொருத்தமான தலைப்பு எழுதி, கவிதை வடிவில் எட்டு வரிகளுக்கு குறைவில்லாமல் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்குக) | 5 |
| IV | அனைத்து வினாக்களுக்கும் விடையளி | 3X8=24 |
| 43. அ) | தமிழரின் சொல்வளம் பற்றியும், புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும், தமிழ்மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்பு<br>➢ தமிழின் சிறப்புகள்<br>➢ தமிழ்ச்சொல்வளம்<br>➢ புதிய சொல்லாக்கத்திற்கான தேவை<br>( பொருத்தமான கருத்துகள் எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக ) | 8 |
| | அல்லது | |
| ஆ) | இறைவன், இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வு:<br>➢ இடைக்காடனார், இனிய தேன் ஒழுகும் வேப்பமாலையினை அணிந்த பாண்டியனின் அவைக்குச் சென்று, தான் இயற்றிய கவிதையைப் படித்தார்.<br>➢ இடைக்காடனார், இறைவனிடம் "குலேசபாண்டியன் சிறிதேனும் சுவைத்துத் தலை அசைக்காமல் புலமையை அவமதித்தான்" என்றார்.<br>➢ இடைக்காடனார், இறைவனிடம் " பாண்டியன் என்னை இகழவில்லை, சொல்லின் வடிவாக உன் இடப்புறம் வீற்றிருக்கும் பார்வதி தேவியையும், சொல்லின் பொருளாக விளங்கும் உன்னையுமே அவமதித்தான்" என்று சினத்துடன் | 8 |

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

| | | |
|---|---|---|
| | கூறிச் சென்றார்.<br>➢ இடைக்காடனாருக்கும் அவர் நண்பராகிய கபிலருக்கும் மனமகிழ்ச்சி உண்டாக்க நினைத்தார் இறைவன். ஆதலால் கடம்பவனக் கோவிலை விட்டு வெளியேறி நேர் வடக்கே வையை ஆற்றின் தென் பக்கத்தே ஒரு திருக்கோவிலை ஆக்கி அங்குச் சென்று இருந்தார்.<br>➢ "இறைவனே, என்னால், என் படைகளால், என் பகைவரால், கள்வரால், காட்டில் உள்ள விலங்குகளால் இத்தமிழ்நாட்டில் தங்களுக்கு இடையூறு ஏற்பட்டதா? மறையவர் நல்ஒழுக்கத்தில் குறைன்தனரோ? தவமும் தருமமும் சுருங்கியதோ? இல்லறமும் துறவறமும் தத்தம் நெறியில் இருந்து தவறினவோ? எமது தந்தையே யான் அறியேன்" என்று வேண்டினான் பாண்டிய மன்னன்.<br>➢ இடைக்காடார் பாடலை இகழ்ந்த குற்றம் தவிர வேறு குற்றம் உன்னிடம் இல்லை. இடைக்காடனார் மீது கொண்ட அன்பினால் இவ்வாறு இங்கு வந்தோம் என்றார்.<br>➢ உமையை ஒரு பாகத்திற்கொண்ட மேலான பரம்பொருளே, புண்ணியனே, சிறியவர்களின் குற்றம் பொறுப்பது பெரியவருக்குப் பெருமையல்லவா?" என்று குற்றத்தைப் பொறுக்க வேண்டி போற்றினான்.<br>➢ முன்னனது மாளிகை அன்றலர்ந்த மலர்கள், பூரண கும்பம், கொடி ஆகியவற்றால் ஒப்பனை செய்யப்பட்டு, ஒளியுடைய மணிகள் பதிக்கப்பெற்றது. அங்குள்ள புலவர்கள் சூழ அறிவை அணிகலன்களாகப் பூண்ட இடைக்காடனாரை மங்கலமாக ஒப்பனை செய்து பொன் இருக்கையில் விதிப்படி அமர்த்தினான் மன்னன்.<br>➢ பாண்டியன், "புண்ணிய வடிவான புலவர்களே, நான் இடைக்கடனாருக்குச் செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டும்" என்று பணிந்து வணங்கினான். நுண்ணிய கேள்வியறிவுடைய புலவர்களும், "மன்னா, நீ கூறிய அமுதம்போன்ற குளிர்ந்த சொல்லால் எங்கள் சினமான தீ தணிந்தது" என்றனர். | |
| 44.<br>அ) | **அன்னமய்யா**<br>➢ அன்னமய்யா<br>➢ உபசரித்தல்<br>➢ தாயின் உள்ளம்<br>➢ பெயர்ப்பொருத்தம்<br>(கதைப்பகுதியையொட்டி உட்தலைப்புகளின் கீழ் கருத்துகள் எழுதப்பட்டிருந்தால் மதிப்பெண் வழங்குக) | 8 |
| | **அல்லது** | |
| ஆ) | **புயலிலே ஒரு தோணி**<br>➢ **வருணனை**<br>மேகப்பொதிகள் பரந்து திரண்டொன்றிக் கும்மிருட்டாய் இறுதி நின்றன.<br>கிடுகிடுக்கும் இடி முழக்கத்துடன் மின்னல் கீற்றுகள் வானைப் பிளந்தன.<br>➢ **அடுக்குத்தொடர்கள்**<br>அருவியருவி குதிகுதித்து இருட்டிருட்டு<br>➢ **ஒலிக்குறிப்புச் சொற்கள்** | 8 |

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

| | | | |
|---|---|---|---|
| | கடலலை அடிக்கிறது. இடி முழக்கம். முனகல்<br>➢ **புயலில் தோணி படும்பாடு**<br>தோணியை மலைத்தொடர் போன்ற அலைகள் மோதித் தாக்குகின்றன.<br>கடல், வெறிக் கூத்தாடுகிறது. தோங்கான் நடுநடுங்கித் தாவித் தாவிக் குதிகுதித்து விழுவிழுந்து நொறுநொறு என நொறுங்குகிறது. | |
| 45.<br>அ) | **விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்**<br>➢ முன்னுரை<br>➢ கல்பனா சாவ்லா இளமைப் பருவம்<br>➢ விண்வெளிப் பயணம்<br>➢ விண்வெளி சாதனைகள்<br>➢ முடிவுரை<br>(உட்தலைப்புகளின் கீழ் பொருத்தமான கருத்துகள் எழுதப்பட்டிருந்தால் மதிப்பெண் வழங்குக) | 8 |
| | **அல்லது** | |
| ஆ) | **மதிப்புரை**<br>➢ முன்னுரை<br>➢ நூலின் தலைப்பு<br>➢ நூலின் மையப்பொருள்<br>➢ மோழிநடை<br>➢ வேளிப்படுத்தும் கருத்து<br>➢ நூலின் நயம்<br>➢ நூல் கட்டமைப்பு<br>➢ சிறப்புக் கூறு<br>➢ நூல் ஆசிரியர்<br>➢ முடிவுரை<br>**(உட்தலைப்புகளின் கீழ் பொருத்தமான கருத்துகள் எழுதப்பட்டிருந்தால் மதிப்பெண் வழங்குக)** | |

சுந்தரராஜன் மா
**B.Lit., M.A., B.Ed., D.T.Ed**
9566585860
ஸ்ரீராம் வித்யாலயா மெட்ரிக்மேல்நிலைப்பள்ளி,
பொட்டனேரி, சேலம் - 636453.

www.Padasalai.Net